
# லெனின்

## அரசு



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# வி. இ. லெனின்

# அரசு

## 1919, ஜூலை 11ல், ஸ்வேர்திலோவ் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய விரிவுரை

ES 18
1514

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

## வெளியிட்டோர் குறிப்பு

வி. இ. லெனின் எழுதிய **அரசு** என்ற நூல், யா. மி. ஸ்வேர்திலோவ் கம்யூனிஸ்டுப் பல்கலைக் கழகத்தில் 1919 ஜூலை 11ல் வி. இ. லெனின் ஆற்றிய விரிவுரையே ஆகும். 1919 ஆகஸ்டு 29ல் வி. இ. லெனின் ஆற்றிய இரண்டாவது விரிவுரையின் பிரதி கிடைக்கவில்லை.

அரசு என்பது என்ன, அது எவ்வாறு தோன்றியது, மனித இனத்தின் வரலாற்று வளர்ச்சிக்குரிய வெவ்வேறு கால கட்டங்களில் அரசின் கருப் பொருளும் வடிவங்களும் யாவை என்பதை வி. இ. லெனின் இந்த விரிவுரையில் விவரித்தார். அரசு பற்றிய பிரச்சினை குறித்து முதலாளித்துவத் தத்துவஞானிகளும் அரசியல்வாதிகளும் கொண்டுள்ள கண்ணோட்டம் ஆதாரமற்றது என்று அவர் காட்டினார்.

இந்த மொழிபெயர்ப்பு, சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் குழுவுக்கு உட்பட்ட மார்க்சிய-லெனினியக் கழகத்தினால் தயாரிக்கப்பட்ட வி. இ. லெனின், **நூல் திரட்டு** 5வது ருஷ்யப் பதிப்பின் 39வது தொகுதிப்படி செய்யப்பட்டிருக்கிறது.

© தமிழ் மொழிபெயர்ப்பு
"முன்னேற்றப் பதிப்பகம்", 1984

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{0101020000-047}{014(01)-84}$ 336-84

தோழர்களே! உங்களால் ஏற்கப் பெற்று, எனக்கு அறிவிக்கப்பட்டுள்ள திட்டத்தின்படி, இன்றைய உரைக்குரிய பொருள் அரசு என்பதாகும். இப்பொருள் பற்றி ஏற்கெனவே உங்களுக்கு எந்த அளவு தெரிந்துள்ளது என்பதை நான் அறியேன். நான் நினைப்பது சரியானால் உங்களது வகுப்புகள் இப்பொழுதுதான் தொடக்கமாகின்றன; இப்பொருளை முறையாக நீங்கள் அணுகத் தொடங்குவது இதுவே முதல் தடவையாகும். இங்ஙனமாயின், கடினமான இப்பொருள் பற்றிய முதற் பேச்சில், எனது உரையைக் கேட்பவரில் பலருக்குப் போதிய அளவு தெளிவாகவும் புரியக் கூடிய விதத்திலும் எனது கருத்துக்களை விளக்கி வைப்பதில் நான் வெற்றி பெறாமல் போகலாம். அப்படி நேர்ந்து விடுமாயின், அது பற்றிக் கலக்கமுற வேண்டாம் என்றும் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனெனில், அரசு என்பது பற்றிய பிரச்சினை மிக மிகச் சிக்கலும் கடினமுமான ஒன்று; முதலாளித்துவ அறிஞர்கள், எழுத்தாளர்கள், தத்துவஞானிகளால் ஒருவேளை மற்ற எந்தப் பிரச்சினையையும்விட மிகுதியாகக் குழப்பி விடப்பட்ட ஒன்றாகும். ஆகவே, இப்பொருளை ஒரு சுருக்கமான பேச்சில் ஒரே முறையில் தெளிவாகப் புரிந்து கொள்ளுவது சாத்தியம் என்று ஒருபோதும் எதிர்பார்க்கக் கூடாது. இப்பொருள் பற்றிய முதற் பேச்சுக்குப்பின், விளங்கிக் கொள்ளாத, அல்லது உங்களுக்குத் தெளிவில்லாத இடங்களை நீங்கள் குறித்து வைத்து, இரண்டாவது, மூன்றாவது, மற்றும் நான்காவது முறையும் அவற்றை அணுக வேண்டும். அவ்வகையில், நீங்கள் விளங்கிக் கொள்ளாதவற்றை, படிப்பது மூலமும் தனிப்பட்ட விரிவுரைகள், உரையாடல்கள் ஆகிய

வற்றினுலும், மேலும் நிறைவு செய்து விளக்கம் பெறலாம். மீண்டும் ஒரு முறை நாம் கூட முடியுமென்று நம்புகிறேன்; அப்பொழுது, இதனேடு தொடர்புடைய பிரச்சினைகள் எல்லாவற்றையும் பற்றிய கருத்துக்களை நாம் பரிமாறிக் கொள்ளவும், மிகவும் தெளிவற்றதாக இருப்பது எது என்பதைக் காணவும் முடியுமென நம்புகிறேன். விரிவுரைகள், உரையாடல்கள் ஆகியவற்ருேடுங்கூட மார்க்சும் எங்கெல்சும் எழுதிய மிகமிக முக்கியமான நூல்களில் சிலவற்றையேனும் படிப்பதில் நீங்கள் சிறிது நேரம் ஈடுபடுத்துவீர்கள் என்றும் நம்புகிறேன். சோவியத், கட்சிப் பள்ளிக்கூட மாணவர்க்கான உங்கள் நூல்நிலையத்தில் உள்ள நூல் பட்டியலிலும் உதவிப் புத்தகங்களிலும் மிகமிக முக்கியமான இந்நூல்களைக் காணக் கூடும் என்பதில் ஐயமில்லை. இந்நூல்களினுடைய வாசகத்தின் சிக்கல் காரணமாக, உங்களில் சிலருக்கு முதலில் திகில் உண்டாகலாம். இருந்தாலும், இதனுல் நீங்கள் ஏதும் கலக்கமடையக் கூடாது என்று மறுபடியும் எச்சரிக்கிறேன். முதல் முறை படிக்கும் பொழுது தெளிவில்லாதது, இரண்டாம் முறை படிக்கும் பொழுது அல்லது பின்னர் அந்தப் பிரச்சினையைச் சற்று வேறுபட்ட ஒரு கோணத்திலிருந்து அணுகும் பொழுது தெளிவாகி விடும். ஏனென்ருல், இந்தப் பிரச்சினை மிகச் சிக்கலானது, அதோடு, முதலாளித்துவ அறிஞர்களும் எழுத்தாளர்களும் இதனை மிகவும் குழப்பியும் விட்டிருக்கிருர்கள் என்பதைத் திரும்பவும் சொல்கிறேன். ஆகவே இந்தப் பிரச்சினையை ஆழமாக ஆராய்ந்து, அதில் சொந்த முயற்சியால் தேர்ச்சி பெற விரும்பும் யாரும் இதனைப் பல காலும் முனைந்து பயில வேண்டும். அதனைப் பற்றித் திரும்பத் திரும்பப் படிக்க வேண்டும். அதனைத் தெளிவாகவும் திண்ணமாகவும் புரிந்து கொள்ளுவதற்குப் பல்வேறு கோணங்களிலிருந்தும் இப்பிரச்சினையைப் பரிசீலிக்க வேண்டும். இப்பிரச்சினைக்கே மீண்டும் திரும்புவது என்பது மிகவும் எளிது. ஏனெனில், அரசியல் முழுவதற்குமே இது அவ்வளவு மூலாதாரமான, அடிப்படையான ஒரு பிரச்சினையாகும். மேலும், தற்காலம் போல அத்தனை புயல் வீசும் புரட்சிகரக் காலங்களில் மட்டும் அல்லாமல், மிகமிக அமைதியான காலங்களில்கூட, ஒவ்வொரு நாளும் எந்தச் செய்தித்தாளிலும் ஏதேனும் ஒரு பொருளாதார அல்லது அரசியல் பிரச்சினையோடு சம்பந்தப்

பட்டு இந்தப் பிரச்சினை உங்களை எதிர்ப்படும். அரசு என்பது என்ன? அதன் தன்மை யாது? அதன் பொருள் என்ன? நமது கட்சி, முதலாளித்துவத்தைத் தூக்கி எறியப் போராடும் கட்சி, அதாவது கம்யூனிஸ்டுக் கட்சி, அரசு விஷயத்தில் கொண்டுள்ள நிலை என்ன? இக்கேள்விக்கு யாதேனுமொரு தொடர்பில் ஒவ்வொரு நாளும் நீங்கள் திரும்ப நேரும். மேலும், வெவ்வேறு நிலைமைகளில், மிகமிக அற்பமான 'பிரச்சினைகளையொட்டி, மிகவும் எதிர்பாராத சந்தர்ப்பத்தில் எதிரிகளோடு நடத்தும் உரையாடல்களிலும் விவாதங்களிலும், இந்தப் பிரச்சினை உங்கள் எதிர்நிற்கக் காண்பீர்கள். ஆதலால், உங்கள் படிப்பின் பயனாய், அரசு என்பது பற்றி நீங்கள் செவிமடுக்கும் உரையாடல்கள், விரிவுரைகள் ஆகியவற்றின் பயனாய், நீங்கள் இந்தப் பிரச்சினையைப் பிறர் துணையின்றியே அணுகும் ஆற்றலைப் பெறுவது மிகவும் முக்கியமாகும். இப்பிரச்சினையைப் பிறர் துணையின்றி ஆராயும் வழியை நீங்கள் கற்றால்தான், உங்கள் கொள்கைத் துணிபுகளில் போதிய அளவு உறுதி கொண்டவர்களாக உங்களை நீங்கள் கருத முடியும், யாரையும் எதிர்த்து எந்த நேரத்திலும் அவற்றைப் போதிய வெற்றியுடன் பாதுகாத்து நிற்க முடியும்.

இச்சுருக்கமான குறிப்புக்களைத் தொடர்ந்து, இனி நான் அப்பிரச்சினையையே ஆராயப் போகிறேன். அரசு என்பது என்ன? அது எவ்வாறு தோன்றியது? முதலாளித்துவத்தை அறவே தூக்கியெறியப் போராடும் தொழிலாளி வர்க்கத்தின் கட்சியான கம்யூனிஸ்டுக் கட்சி, அரசைப் பற்றிக் கொள்ள வேண்டிய அடிப்படையான உறவு நிலை யாது? இதுவே பிரச்சினை ஆகும்.

அரசைப் பற்றிய பிரச்சினையைப் போல முதலாளித்துவ விஞ்ஞானம், தத்துவஞானம், சட்டக் கலை, அரசியல் பொருளாதாரம், பத்திரிகைகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளால் தெரிந்தோ தெரியாமலோ அவ்வளவு குழப்பி விடப்பட்ட வேறொரு பிரச்சினையை நீங்கள் காண்பது அருமை என்று நான் முன்பே கூறியுள்ளேன். இப்பிரச்சினை இந்நாள் வரையில் மதம் பற்றிய பிரச்சினைகளோடு அடிக்கடி பிணைத்துக் குழப்பப்பட்டிருக்கிறது. மதப் போதனைகளைப் பின்பற்றுவோர்கள் மட்டும் அன்றி (அவர்களிடம் அதனை எதிர்பார்ப்பது முற்றிலும் இயற்கைதான்), மதக் காழ்ப்பினின்றும் விடுபட்ட

வராகத் தம்மைக் கருதுகின்றவர்கள்கூட, அரசு என்பது பற்றிய தனிப் பிரச்சினையை மதம் பற்றிய பிரச்சினைகளோடு மிக அடிக்கடி குழப்புகின்றனர். அத்துடன், சித்தாந்தம், தத்துவஞானம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைக்கப் பெற்ற வாதங்களும் முடிவுகளும் நிறைந்த ஒரு போதனையை, அடிக்கடி சிக்கல் மிகுந்த ஒரு போதனையையே, உருவாக்க வும் பாடுபடுகின்றனர். அரசு என்பது ஏதோ தெய்விகமானது, இயற்கைக்கு அப்பாற்பட்டது; மனிதகுலம் வாழ்வதற்கே காரணமான ஏதோ ஒரு வகைச் சக்தி; மனிதனுடைய தல்லாத ஒன்றை, அவனுக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒன்றால் கொடுக்கப்பட்டதை அது தன்னோடு கொண்டுவருகிறது; மக்க ளுக்கு அதனை வழங்குகிறது அல்லது வழங்குவதற்காக வைத் திருக்கிறது—அரசு தெய்வத்தால் தோற்றுவிக்கப் பெற்ற ஒரு சக்தி என்றெல்லாம் இந்தப் போதனை உரிமை கொண் டாடுகிறது. அத்துடன் வேறு ஒன்றையும் சொல்லியாக வேண்டும். இந்தப் போதனை சுரண்டும் வர்க்கங்களின்—நிலப் பிரபுக்கள், முதலாளிகள் ஆகியவர்களின்—நலன்களோடு மிகமிக நெருக்கமாகப் பிணைக்கப் பெற்றிருக்கிறது, அவர் களின் நலன்களுக்காக மிக நன்றாகப் பணி புரிகிறது. முத லாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகளாகத் திகழும் கனவான் களின் பழக்க வழக்கங்கள், கருத்துக்கள், விஞ்ஞானங்கள் எல்லாவற்றிலுமே அது மிக ஆழமாக இழைந்து கலந்திருக் கிறது. ஆகவேதான் அந்தப் போதனையின் மிச்சசொச்சங்கள் எங்குமிருப்பதை நீங்கள் காணலாம். தாங்கள் மதக் காழ்ப்புக் களுக்கு அடிமைப்பட்டவர்கள் என்று குறிப்பிட்டால் அதனை வெறுப்புடன் மறுத்து, அரசு என்பதைத் தாங்கள் நிதானப் பார்வையுடன் கருதக் கூடியவர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கும் மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்* ஆகியோர் அரசு பற்றிக் கொண்டுள்ள

* **மென்ஷிவிக்குகள்**—ருஷ்யச் சமூக-ஜனநாயக இயக்கத் தில் இருந்த குட்டி முதலாளித்துவ, சந்தர்ப்பவாதப் போக்கின் ஆதரவாளர்கள். தொழிலாளி வர்க்கத்தின் மீது முதலாளித்துவச் செல்வாக்கைப் பரப்பியவர்கள்.

**சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்**—குட்டி முதலாளித்துவப் போக்குள்ள இந்தக் கட்சி ருஷ்யாவில் 1901—1902ம் ஆண்டுகளில் நிறுவப்பட்டது. 1917ம் ஆண்டில் இது எதிர்ப் புரட்சியின் தரப்புக்குச் சென்று விட்டது.—ப-ர்.

கருத்தில்கூட அந்தப் போதனையின் மிச்சசொச்சங்களைக் காண லாம். இந்தப் பிரச்சினை இவ்வளவு தூரம் குளறுபடி செய்து சிக்கலாக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் யாதெனில், மற்ற எந்தப் பிரச்சினைகளையும்விட (பொருளாதார விஞ்ஞானத்தின் அடிப்படைகளைத் தவிர்த்து) அதிகமாக ஆளும் வர்க்கங்களின் நலன்களை இது பாதிக்கிறது. சமுதாயச் சலுகையை நியாயப் படுத்துவதற்கும், சுரண்டல் நிகழ்வதை நியாயப்படுத்துவ தற்கும், முதலாளித்துவம் இருப்பதை நியாயப்படுத்துவதற் கும், அரசு பற்றிய போதனை பணி புரிகிறது. எனவே, இந்தப் பிரச்சினையில் ஒருதலைச்சார்பற்ற நிலையை எதிர்பார்ப் பதும், விஞ்ஞானப் போக்கு உடையவராகத் தங்களைக் கூறிக் கொள்ளுகிறவர்கள், இப்பொருள் பற்றி சுத்தமான விஞ்ஞா னத்திற்குரிய ஒரு கருத்தைத் தரக் கூடும் என்ற நம்பிக்கை யோடு இந்தப் பிரச்சினையை அணுகுவதும் மாபெரும் தவ ருகும். இப்பிரச்சினை பற்றிய நல்ல தெளிவு உங்களுக்கு ஏற் படும் பொழுது, போதிய அளவு ஆழமாகச் சென்று அதை ஆராய்ந்த பிறகு அரசு என்பது பற்றிய பிரச்சினையில், அரசு பற்றிய போதனையில், அரசு பற்றிய தத்துவத்தில், வெவ் வேறு வர்க்கங்களுக்கிடையிலும் நிகழும் போராட்டத்தை— அரசு பற்றிய கருத்து முரண்பாட்டின் மூலமும், அரசு வகிக் கும் பங்கு பற்றிய, அரசு என்பதன் பொருள் பற்றிய மதிப் பீட்டின் மூலமும் வெளிப்படுகிற அல்லது பிரதிபலிக்கப்படு கிற போராட்டத்தை—நீங்கள் என்றென்றும் காண்பீர்கள்.

இந்தப் பிரச்சினையை முடிந்த அளவுக்கு விஞ்ஞான முறைப்படி அணுகும் பொருட்டு, அரசு என்பதன் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய வரலாற்றை மேலோட்டமாகவாவது பார்வையிட வேண்டும். சமூக விஞ்ஞானம் பற்றிய பிரச்சினை யில் மிகமிக நம்பகமானதொன்றும், இந்தப் பிரச்சினையைச் சரிவர அணுகும் பழக்கத்தை உண்மையிலேயே பெறுவதற் கும், சில்லறை விவரங்களின் திரளிலோ ஒன்றையொன்று எதிர்க்கும் கருத்துக்களின் மிகப்பெரிய வேறுபாட்டிலோ சிக்கி வழிதவறி விடாமலிருப்பதற்கும் மிகமிக அவசியமான தொன்று—இந்தப்பிரச்சினையை விஞ்ஞான வழியில் அணுகு வதற்கு மிகமிக முக்கியமானதொன்று—என்னவென்ருல் அடிப்படையான வரலாற்றுத் தொடர்பை மறவாதிருப்ப தும், ஒவ்வொரு பிரச்சினையையும் ஆராயும் போது, குறிப்

பிட்ட ஒரு நிகழ்ச்சி வரலாற்றில் எவ்வாறு தோன்றியது, அது தன் வளர்ச்சிப் போக்கில் என்னென்ன முக்கியமான கட்டங்களைக் கடந்து சென்றது என்ற நிலைகளினின்று ஆராய்வதும், இந்த வளர்ச்சி நிலையிலிருந்து குறிப்பிட்ட பொருள் இன்று என்னவாக ஆகியிருக்கிறது என்பதை ஆராய்வதுமாகும்.

அரசு என்ற பிரச்சினையைப் பொருத்தவரை, நீங்கள் எங்கெல்ஸ் எழுதிய **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலைப் படிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். நவீன சோஷலிசத்திற்குரிய அடிப்படை நூல்களில் இது ஒன்று. அதன் ஒவ்வொரு வாக்கியத்தையும் நம்பிக்கையோடு ஏற்கலாம். அதாவது, ஒவ்வொரு வாக்கியமும் மனம் போனவாறு கூறப்பட்டதன்று, வரலாற்று, அரசியல் ஆகிய துறைகளைச் சேர்ந்த அளவற்ற விவரங்களை அடிப்படையாகக் கொண்டு கூறப்பட்டுள்ளது என்று நம்பிக்கையோடு ஏற்கலாம். இந்த நூலின் எல்லாப் பகுதிகளும் எளிதில் புரியக் கூடிய வகையில் ஒரே நிகராக எடுத்து விளக்கப்படவில்லை என்பதில் ஐயமில்லைதான். வரலாறு, பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஒரு குறிப்பிட்ட அளவு அறிவுடைய வாசகரை மனத்திற் கொண்டே நூலின் சில பகுதிகள் எழுதப்பட்டுள்ளன. ஆயினும் இந்த நூலைப் படித்ததும், அதை உடனேயே புரிந்து கொள்ளாவிடில், நீங்கள் கலக்கமுறக் கூடாது என்று நான் மீண்டும் சொல்லுகிறேன். இந்நூலை எடுத்த எடுப்பில் புரிந்து கொள்வது எவருக்கும் அரிது. பின்பு, உங்கள் ஆர்வம் தூண்டி விடப்படும் பொழுது, அதை மீண்டும் படித்தீர்களானல், அதனை முழுக்கவும் இல்லாவிட்டாலும், அதன் பெரும் பகுதியைப் புரிந்து கொள்வதில் வெற்றியுறுவீர்கள். நான் இந்நூலைக் குறிப்பிடுவதன் காரணம் யாதெனில் இங்குக் குறிக்கப்பட்ட பொருளில் இந்தப் பிரச்சினையை ஆராய்வதற்கான சரியான வழியை அது காட்டுகின்றது. அரசினது தோற்றத்தின் வரலாறு பற்றிய ஒரு சுருக்க உரையுடன் அது தொடக்கமாகிறது.

இந்தப் பிரச்சினையைச் சரிவர ஆராய்வதற்கு நாம் அதன் வளர்ச்சி பற்றிய வரலாறு முழுவதன் மீதும் கண்ணோக்கு செலுத்துவது இன்றியமையாததாகும். மற்ற ஒவ்வொரு பிரச்சினையையும் போலத்தான் இதுவும். எடுத்துக்காட்டாக, முதலாளித்துவத்தின் தோற்றம், மனிதனை மனிதன் சுரண்டு

தல், சோஷலிசம், சோஷலிசம் எவ்வாறு தோன்றியது, அது தோன்றுவதற்குக் காரணமான சூழ்நிலைகள் யாவை என்பன போன்ற எந்தப் பிரச்சினையையும் ஆழமான முறையில் நம்பிக்கையுடன் ஆராய்வது என்பது, அதன் வளர்ச்சி பற்றிய வரலாறு முழுவதையும் நாம் நோக்கினுல்தான் முடியும். இந்தப் பிரச்சினையைப் பொருத்தவரை, அரசு எல்லாக் காலங்களிலும் இருந்ததில்லை என்பதை முதலில் கருத்தில் கொள்ள வேண்டும். அரசு இல்லாதிருந்த காலம் ஒன்றும் இருந்தது. எங்கெங்கே எவ்வெப்போது சமுதாயத்தில் வர்க்கப் பிரிவினை தோன்றுகிறதோ, சுரண்டுவோரும் சுரண்டப் படுவோரும் தோன்றுகிறர்களோ, அங்கெல்லாம் அவ்வப் போது அரசும் தோன்றுகிறது.

மனிதனை மனிதன் சுரண்டுவதற்கான முதல் வடிவம், வர்க்கங்களாக—ஆண்டைகள், அடிமைகள் என்ற—பிரிகிற முதல் வடிவம் தோன்றுவதற்கு முன்பு தந்தைவழிக் குடும்பம் இருந்தது; இதையே சிலவேளை **கிளான் வழிக்** குடும்பம் என்றும் கூறுவதுண்டு (கிளான் என்பது தலைமுறை, குலம்; குலம், தலைமுறை ஆகியவற்றுக்கு இணங்க மக்கள் கூடி வாழும் முறை). ஆதி மக்களினங்களது வாழ்க்கையின் அந்த ஆதிகாலத்திற்குரிய வெவ்வேறு திட்டமான அறிகுறிகள் இன்றளவும் தப்பிப் பிழைத்திருக்கின்றன. ஆதிகாலப் பண்பாடு பற்றிய எந்த ஒரு நூலை எடுத்தாலும், ஆதிகாலக் கம்யூனிசத்தை ஓரளவு ஒத்திருக்கும் காலம், அடிமைகள் என்றும் ஆண்டைகள் என்றும் சமுதாயம் பிரிக்கப்படாத காலம் ஒன்று இருந்தது என்பது பற்றிய வெவ்வேறு அளவு திட்டமான விளக்கங்களையும் குறிப்புகளையும் நினைவுகளையும் நீங்கள் எப்பொழுதும் காண்பீர்கள். அக்காலத்தில், அரசு என்பது இருந்ததில்லை. வன்முறைகளைப் பயன்படுத்தும், வன்முறைக்கு மக்களைக் கீழ்ப்படுத்தும் முறையான தனி இயந்திரம் இருந்ததில்லை. அவ்வகை இயந்திரமே அரசு எனப்படும்.

ஆதிகாலச் சமுதாயத்தில், ஓரளவு காட்டுமிராண்டி நிலையை ஒத்த, வளர்ச்சியின் இன்னும் மிகவும் தாழ்ந்த படியிலேயே மக்கள் சிறு சிறு குலங்களாக வாழ்ந்த காலத்தில், நாகரிகம் படைத்த இன்றைய மனிதச் சமுதாயத்துக்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு காலகட்டத்தில், அரசு என்ற ஒன்று இருந்ததற்குரிய அறிகுறிகளே

தென்படவில்லை. அங்கே, வழக்கம், மரபு இவற்றின் ஆதிக்கத்தையும்,குலத் தலைவர்கள் வைத்தாண்ட செல்வாக்கு,மதிப்பு, அதிகாரம் இவற்றையுமே நாம் காண்கிறோம். இந்த அதிகாரம் சிலவேளை மகளிருக்கும் அளிக்கப் பெற்றிருந்ததைக் காண்கிறோம்—அன்றைய மகளிர் நிலை இன்றைய மகளிரின் உரிமைகளற்ற ஒடுக்கப்பட்ட நிலை போல இருந்ததில்லை. ஆனால் அந்தக் காலத்தில், மற்றவரை ஆள்வதற்காகவும் ஆள்வதையே நோக்கமாகக் கொண்டும் ஒரு வகைக் கட்டாயப்படுத்தும் இயந்திரத்தை, வன்முறை இயந்திரத்தை முறையாகவும் நிரந்தரமாகவும் கையாளுவதற்காக மக்களிடையே பிரித்து வைக்கப்பட்ட தனி வகையின ஆட்களை நாம எங்கும் காண்பதில்லை. வன்முறைக்கு மற்றவருடைய சித்தத்தைப் பணியச் செய்வதற்குரிய ஆயுதமேந்திய இராணுவப் பிரிவுகள், சிறைச்சாலைகள், வேறு பல சாதனங்கள் முன்சொன்ன இயந்திரத்தின் இன்றைய உருவம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அரசு என்பதன் சாரம் இவை அனைத்திலும் அடங்கியிருக்கிறது. இவற்றை ஆதிகாலச் சமுதாயத்தில் எங்குமே நாம் காண்பதில்லை.

முதலாளித்துவ அறிஞர்கள் முன்வைத்துள்ள மதப் போதனைகள் என்று கூறப்படுபவை, உபாயங்கள், தத்துவஞான வாதங்கள், பல்வேறு கருத்தோட்டங்கள் ஆகியவற்றை ஒரு புறம் ஒதுக்கி விட்டு, விஷயத்தின் உண்மையான சாரத்தை மட்டும் அறிய முயன்றால், அரசு என்பது மனிதச் சமுதாயத்தினின்று முழுமையாகப் புறத்தே நிற்கும் ஆளுவதற்கான இயந்திரமாக விளங்குவதை நாம் காண்போம். ஆளுவதை மட்டுமே தொழிலாகக் கொண்ட ஒரு தனிப் பிரிவினர் தோன்றும் பொழுது, பிறருடைய சித்தத்தைக் கட்டாயப் படுத்துவதற்கும் கீழ்ப்படுத்துவதற்குமான தனி இயந்திரம்—சிறைச்சாலைகள், தனிப்பட்ட படைப் பிரிவுகள், இராணுவம் முதலியவை— ஆளும் பொருட்டு அவர்களுக்குத் தேவைப் படும் பொழுது, அரசு என்பது தோன்றுகிறது.

என்றாலும், அரசென்பதே இல்லாத காலம் ஒன்று இருந்தது. அப்பொழுது, பொதுத் தொடர்புகள், சமுதாயமே கூட, கட்டுப்பாடு, வேலை ஏவுதல் முறை ஆகிய எல்லாம் பழக்க வழக்கம், மரபு ஆகியவற்றின் பலத்தினாலோ, குலத்தின் மூத்தோர்கள் அல்லது மகளிர் பெற்றிருந்த செல்வாக்கினா

லோ உயர் மதிப்பினுலோ நிர்வகிக்கப் பெற்றன—மகளிரோ அந்நாளில் ஆடவரோடு சரி நிகரான நிலையைப் பெற்றிருந்த தோடு, பல சமயங்களில் ஆடவரிலும் உயர்ந்த நிலையைக் கூடப் பெற்றிருந்தார்கள். அந்நாளில் ஆளுவதில் தனித் தேர்ச்சி பெற்ற வகையினர் இருந்ததில்லை. எங்கு எப்பொழுது சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிந்ததோ, அதாவது மக்களிடையே ஒரு வகுப்பினர் மற்ற வகுப்பினரின் உழைப்பை நிரந்தரமாகத் தன்வசமாகக் கொள்ள முடிகிற, ஒரு வகையினர் மற்ற வகையினரைச் சுரண்டுகிற மக்கள் குழுக்களாகப் பிரிந்ததோ, அங்கு அப்பொழுது அரசு என்பது மக்களை நிர்ப்பந்திக்கும் தனி இயந்திரமாகத் தோன்றியது என்று வரலாறு காட்டுகிறது.

சமுதாயம் இவ்வாறு வர்க்கங்களாகப் பிரிந்ததை வரலாற்றின் ஓர் அடிப்படை உண்மையாக எப்போதும் தெளிவாக மனதில் இருத்துதல் வேண்டும். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக விதிவிலக்கில்லாமல் எல்லா நாடுகளிலும் எல்லா மனிதச் சமுதாயங்களின் வளர்ச்சியும் ஒரு பொது விதிக்கு உட்பட்டு, முறையாகவும் ஒத்தியைந்த வழியிலும் நடந்திருக்கும் என்பதைக் காட்டுகிறது. அவ்வகையில், முதற்கண் சமுதாயம் வர்க்கங்கள் இன்றி இருந்தது—தொடக்க காலத்திய தந்தைவழி, ஆதிகாலத்திற்குரிய சமுதாயம். அதில் உயர்குடி மக்கள் என்போர் இருந்ததில்லை. பிறகு அடிமை முறையில் அமைந்த சமுதாயத்தை—ஆண்டை அடிமைச் சமுதாயத்தை—நாம் காண்கிறேம். நாகரிகம் படைத்த இன்றைய ஐரோப்பா முழுவதும் இந்தக்கட்டத்தைக் கடந்து தான் வந்திருக்கின்றது—இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அடிமை முறை இங்கு ஆதிக்கம் செலுத்தியது. உலகத்தின் மற்றப் பகுதிகளிலுள்ள மிகவும் பெரும்பாலான மக்களினங்கள் இந்தக் கட்டத்தைக் கடந்து வந்திருக்கின்றன. குறைந்த வளர்ச்சி பெற்ற மக்களினங்களிடையே இன்றளவும் அடிமை முறையின் அடையாளங்கள் நீடித்திருக்கின்றன. இன்றைக்கும், எடுத்துக்காட்டாக ஆப்பிரிக்காவில், அடிமை முறை ஏற்பாடுகளைக் காணலாம். ஆண்டைகளும் அடிமைகளும் முதன்முதல் ஏற்பட்ட முக்கிய வர்க்கப் பிரிவுகள் ஆவர். முதலில் கூறப்பட்ட பிரிவினர் நிலமும் கருவிகளும்—அக் கருவிகள் அக்காலத்தில் எவ்வளவுதான் பண்படாத நிலையில்

இருந்தாலும்—ஆகிய உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும் மட்டுமல்ல, மக்களையுங்கூடத் தம் உடைமையாக்கிக் கொண்டார்கள். இந்தப் பிரிவினர் ஆண்டைகள் எனப் பட்டனர். மற்றவருக்காக உழைத்து, உழைப்பை வழங்கியவர்களோ, அடிமைகள் எனப்பட்டனர்.

வரலாற்றில் இந்த வடிவத்தைத் தொடர்ந்து இன்னொன்று—பண்ணையடிமை முறை*—தோன்றியது. மிகவும் பெரும்பாலான நாடுகளில், அடிமை முறை தன் வளர்ச்சிப் போக்கில் பண்ணையடிமை முறையாக ஆயிற்று. அப்பொழுது சமுதாயத்தின் அடிப்படைப் பிரிவினை நிலப்பிரபுக்களும் பண்ணையடிமைகளுமாக அமைந்தது. மக்களுக்கிடையே நிலவிய உறவுகளின் வடிவம் மாறலாயிற்று. ஆண்டைகள் அடிமைகளைத் தங்கள் உடைமையாகவே மதித்திருந்தனர். சட்டம் இந்தக் கருத்தை உறுதிப்படுத்தியதோடு, அடிமையை முழுக்கவும் ஆண்டைக்கே உரிமைப்பட்ட ஒரு பொருளாகக் கருதியது. பண்ணையடிமைக் குடியானவர்களைப் பொருத்த மட்டில், வர்க்க ஒடுக்குமுறையும் சார்பு நிலையும் தொடர்ந்து இருந்து வந்தன. ஆயினும், குடியானவன் நிலப்பிரபுவின் உடைமையில் உள்ள பொருளாகக் கருதப்படவில்லை. குடியானவனுடைய உழைப்புக்கும், சில குறிப்பான ஊழியங்களைப் புரியும்படி அவனைக் கட்டாயப்படுத்தவும் மட்டும் நிலப்பிரபு உரிமை பூண்டிருந்தார். ஆனால் நடைமுறையில், குறிப்பாக, பண்ணையடிமை முறை எல்லா நாடுகளையும் விட நீண்ட காலமாக நிலவி, மிகவும் கொடுமையான வடிவங்களையும் கொண்டிருந்த ருஷ்யாவில், இது அடிமை முறையினின்று எவ்வகையிலும் வேறுபட்டது இல்லை என்று உங்களுக்குத் தெரியும்.

இதன்பின், பண்ணையடிமைச் சமுதாயத்தில் வாணிபம் வளர்ச்சியுற்று, உலகச் சந்தை தோன்றி, பணப் புழக்கம் வளர்ச்சியுற்றதோடு கூடவே, ஒருபுதிய வர்க்கம் தோன்றிற்று. அதுதான் முதலாளி வர்க்கம். பண்டத்திலிருந்து, பண்டமாற்றத்திலிருந்து, பணத்தின் ஆதிக்கம் தோன்றியதிலிருந்து எழுந்தது மூலதனத்தின் ஆதிக்கம். பதினெட்டாம் நூற்

---

* ருஷ்ய மொழியில் ''பண்ணையடிமை முறை'' என்று பொருள்படும் சொல்லுக்கும் ''கட்டுண்டு'' என்று பொருள்படும் சொல்லுக்கும் ஒரே மூலம் உண்டு.—ப-ர்.

ருண்டில், அல்லது திட்டவட்டமாகக் கூறினுல் பதினெட்டாம் நூற்ருண்டின் இறுதியிலும், பத்தொன்பதாம் நூற்ருண்டிலும் உலகெங்கும் புரட்சிகள் நிகழ்ந்தன. மேற்கு ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலிருந்தும் பண்ணையடிமை முறை அகற்றப்பட்டது. ருஷ்யாவில் எல்லாவற்றுக்கும் கடைசியாக இது நிகழ்ந்தது. 1861ல், ருஷ்யாவிலும் ஒரு தீவிர மாற்றம் உண்டாயிற்று. இதன் விளைவாக, சமுதாயத்தின் ஒரு வடிவத்துக்குப் பதிலாக அதனிடத்தில் மற்ருெரு வடிவம் ஏற்பட்டது. அதாவது, பண்ணையடிமை முறையை அகற்றி விட்டு, முதலாளித்துவம் வந்தது. இதன் கீழ் வர்க்கப் பிரிவினை தொடர்ந்து இருந்து வந்தது. மேலும் பண்ணையடிமையின் பல்வேறு அடையாளங்களும் மிச்சசொச்சங்களும் தொடர்ந்து இருந்து வந்தன. என்ருலும், வர்க்கப் பிரிவினை அடிப்படையில் ஒரு புதிய உருவத்தை மேற்கொள்ளலாயிற்று.

எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் உள்ள மூலதனத்திற்கு உடைமையாளர், நிலத்திற்கு உடைமையாளர், ஆலைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் உடைமையாளர் ஆகியோர் மக்கள் தொகையில் மிகமிகச் சிறுபான்மையராகவே இருந்தார்கள், இன்னும் இருக்கிருர்கள். ஆனுல் மக்கள் எல்லாருடைய உழைப்பும் முழுக்க முழுக்க இவர்கள் வசத்தில் இருக்கிறது. இதன் நேர் விளைவாக, உழைப்பாளி மக்கள் அனைத்தின் மீதும் இவர்கள் ஆதிக்கம் செலுத்துகிருர்கள், அவர்களை ஒடுக்குகிருர்கள், சுரண்டுகிருர்கள். உழைப்பாளி மக்களில் பெரும்பாலோர் பாட்டாளிகளாய், கூலித் தொழிலாளர்களாய் வாழ்பவர்கள்; அதாவது, உற்பத்தி முறையில் தங்களுக்கே உரிய உழைக்கும் கரங்களை, தங்கள் உழைப்புச் சக்தியை விலைகூறுவதால் மட்டும் பிழைப்புக்கு வேண்டியதைப் பெறுகிறவர்கள். குடியானவர்கள் பண்ணையடிமைக் காலத்திலேயே ஒற்றுமை கெட்டு, நசுக்கப்பட்டிருந்தார்கள். பண்ணையடிமை முறை போய் முதலாளித்துவம் நிலைபெறத் தொடங்கிய பொழுது, இவர்களில் ஒரு பகுதியினர் (பெரும்பாலானவர்) பாட்டாளிகளாக மாற்றப் பெற்றனர். மற்ருெரு பகுதியினர் (சிறுபான்மையர்) செல்வம் படைத்த குடியானவர்களாக, அதாவது தாங்களே தொழிலாளரைக் கூலிக்கமர்த்திக் கொள்வோராய், நாட்டுப்புறத்தைச் சேர்ந்த முதலாளித்துவ வர்க்கத்தினராய் மாற்றமடைந்தனர்.

இந்த அடிப்படை உண்மையை—அதாவது, சமுதாயம் அடிமை முறையின் ஆதிகால வடிவங்களிலிருந்து பண்ணை யடிமை நிலைக்கும், பிறகு, இறுதியாக, முதலாளித்துவத்திற் கும் மாறியதை—எப்பொழுதும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில், இந்த அடிப்படை உண்மை யை நினைவில் கொள்வதால் மட்டுந்தான், எல்லா அரசியல் போதனைகளையும் இந்த அடிப்படைத் திட்டத்தில் வைத்துப் பரிசீலிப்பதால் மட்டுந்தான், இந்தப் போதனைகளைச் சரியான வகையில் மதிப்பிட்டறியவும், அவை குறிப்பது என்ன என் பதைப் புரிந்து கொள்ளவும் முடியும். மனித இனத்தின் வர லாற்றில், அடிமை முறையும் பண்ணையடிமை முறையும் முத லாளித்துவமுமான இந்தப் பெருங் காலப் பகுதிகளில் ஒவ் வொன்றும் பத்துக் கணக்கான, நூற்றுக் கணக்கான நூற் றுண்டுகளைக் கொண்டது. மற்றும் ஏராளமான பல அரசியல் வடிவங்களை, வெவ்வேறுன அரசியல் போதனைகளை, கருத் தோட்டங்களை, புரட்சிகளையெல்லாம் தோன்றச் செய்துள் ளது. முதலாளித்துவ அறிஞர்கள், அரசியல்வாதிகள் ஆகிய வர்களின் அரசியல், தத்துவஞான, இன்னும் பிற போதனை களுடன் சிறப்பாகத் தொடர்புள்ள இந்தப் பெரும் வேறுபாட்டையும் அளப்பரிய வகைப்பாட்டையும் விளங்கிக் கொள்ள ஒரே ஒரு வழிதான் உண்டு—அதாவது, சமுதாயத் தின் இந்த வர்க்கப் பிரிவினை, வர்க்க ஆதிக்கத்தின் வடிவங்க ளில் ஏற்பட்ட மாறுதல் ஆகிய இவற்றை வழி காட்டும் சாதன மாகக் கொண்டு இந்தக் கொள்கை நிலையில் உறுதியாக நின்று பொருளாதாரம், அரசியல், ஆன்மிகம், சமயம் முதலானவை பற்றிய எல்லாச் சமுதாயப் பிரச்சினைகளையும் ஆராய்வதே அந்த வழியாகும்.

இந்த அடிப்படைப் பிரிவினை பற்றிய பார்வை நிலை யிலிருந்து நீங்கள் அரசு என்பதை ஆராய்வீர்களாஞல், நான் முன்பே சொல்லியபடி, சமுதாயம் வர்க்கங்களாகப் பிரி வதற்கு முன்பு, அரசே இருந்ததில்லை என்பதைக் காண்பீர்கள். ஆயினும், சமுதாயத்தின் வர்க்கப் பிரிவினை உண்டாகி, உறுதி யாக வேரூன்றி விட்ட பொழுது, வர்க்கச் சமுதாயம் தோன்றி விட்ட பொழுது, அரசு என்பதும் கூடவே தோன்றி, உறுதியாகவும் வேரூன்றி விட்டது. அடிமை முறை, பண்ணை யடிமை முறை, முதலாளித்துவ முறை ஆகிய கட்டங்களைக்

கடந்து சென்ற, இன்னும் சென்று கொண்டிருக்கிற பதிற்றுக் கணக்கான, நூற்றுக் கணக்கான நாடுகளை மனித இனத்தின் வரலாறு கண்டிருக்கிறது. இவற்றில் ஒவ்வொரு நாட்டிலும், மாபெரும் வரலாற்று மாறுதல்கள் ஏற்பட்டிருப்பினுங் கூட, மனித இனத்தின் இந்த வளர்ச்சியோடு, அடிமை நிலையிலிருந்து பண்ணையடிமை முறையின் வழியாக முதலாளித்துவத்திற்கும், முதலாளித்துவத்தை எதிர்த்து உலகெங்கும் பரவிய இன்றையப் போராட்டத்திற்கும் சமுதாயம் மாறிச் சென்றிருக்கும் நிகழ்ச்சியுடனும் தொடர்பு கொண்ட எத்தனையோ அரசியல் திடீர் மாற்றங்களும் எத்தனையோ புரட்சிகளும் ஏற்பட்டிருந்தாலுங்கூட, அரசின் தோற்றத்தை நீங்கள் எப்பொழுதும் காண்பீர்கள். சமுதாயத்தினின்றும் தனித்துப் பிரிந்த ஒரு குறிப்பான இயந்திரமாக அது எப்பொழுதும்இருந்து வந்திருக்கிறது; முற்றவோ அல்லது பெரும்பாலும் முழுக்கவோ அல்லது முக்கியமாகவோ ஆளுகை செய்வதில் ஈடுபட்டவரான மக்கள் குழுவினையே அது கொண்டிருந்து வந்திருக்கிறது. மக்கள், ஆளப்படுவோராகவும்ஆள்வதில் தேர்ந்தவராகவும் பிரிக்கப்பட்டுள்ளனர். கடைசியில் கூறப்பட்டவர்கள், சமுதாயத்திற்கு மேல் உயர்ந்து ஆளுவோர், அரசின் பிரதிநிதிகள் என அழைக்கப்படுவோராய் இருக்கின்றனர். இந்த இயந்திரம், மற்றவரை ஆள்கின்ற இந்த மக்கள் குழு, கட்டாயப்படுத்துவதற்கான, பொருளாயதப் பலம் கொண்ட ஒரு குறிப்பிட்ட கருவியை எப்பொழுதும் தன்னிடம் கொண்டிருக்கிறது. ஆதிகாலக் குண்டாந்தடி மூலமோ, அல்லது அடிமை முறையின் காலகட்டத்தில் இன்னும் அதிகம் மேம்பட்ட ஆயுத வகைகள் மூலமோ, அல்லது மத்திய காலத்தில் தோன்றிய சுடு கருவிகள் மூலமோ, அல்லது, கடைசியாக, இருபதாம் நூற்றாண்டில் தொழில் நுணுக்கத்தின் அதிசயங்களாக உள்ள, இன்றையத் தொழில்நுட்பக் கலையின் மிகப் புதிய சாதனைகளை ஆதாரமாகக் கொண்ட நவீனக் கருவிகள் மூலமோ, இந்த வன்முறை மக்கள் மீது செலுத்தப்படுகின்றது. வன்முறைக்குரிய உபாயங்கள் மாறின. ஆனால் அரசு நிலவிய பொழுதெல்லாம், ஒவ்வொரு சமுதாயத்திலும் மக்களின் ஒரு பகுதியினர் ஆள்வோராய், ஏவல் கொள்வோராய், ஆதிக்கம் புரிவோராய், தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்த வேண்டி, பொருளாயத

நிர்ப்பந்தத்திற்கான ஒரு இயந்திரத்தை, வன்முறைக்குரிய இயந்திரத்தை, அவ்வக்காலத்தின் தொழில் நுணுக்கத் தரத்திற்கு ஒத்த ஆயுதங்களைப் பெற்றிருந்தனர். இந்தப் பொது நிகழ்ச்சிகளை ஆராய்வதன் மூலம், வர்க்கங்களே இருந்திராத காலத்தில், சுரண்டுவோரும் சுரண்டப்படுவோரும் இருந்திராத காலத்தில் அரசென்பது இருந்ததில்லையே ஏன் என்பதையும், வர்க்கங்கள் தோன்றிய பொழுது அதுவும் தோன்றியது ஏன் என்பதையும் நம்மையே நாம் கேட்டுக் கொள்வதன் மூலம் மட்டுந்தான், அரசின் சாரம் என்ன, அதன் பாத்திரம் என்ன என்ற கேள்விக்கான ஒரு திட்டமான விடையை நாம் பெறுவோம்.

அரசென்பது, ஒரு வர்க்கத்தின் மீது மற்றொரு வர்க்கத்தின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக உள்ள ஓர் இயந்திரம். சமுதாயத்தில் வர்க்கங்களே இல்லாத போது, அடிமை முறையின் கால கட்டத்திற்கு முன்பு மக்கள் அதிக சமத்துவமுடைய ஆதிகால நிலையிலேயே உழைத்த நாளில், உழைப்பின் உற்பத்தித் திறன் மிகமிகக் கீழ்ப் படியில் இன்னும் இருந்து வந்த சூழ்நிலையில், முற்றிலும் பண்படாத, மிகமிக எளிய வாழ்வுக்கான சாதனங்களைப் பெறுவதே ஆதிகால மனிதனுக்கு அரிதாக இருந்த அந்நாளில், மக்களின் தனித்த ஒரு பிரிவு—சமுதாயத்தின் மற்றப் பகுதியின் மேல் ஆளுகையும் ஆதிக்கமும் புரிய வேண்டித் தனியாக ஒதுங்கிப் பிரிந்த ஒன்று—இன்னும் தோன்றவில்லை; தோன்றியிருக்கவும் முடியாது. சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிவதின் முதல் வடிவம் தோன்றிய பொழுதுதான், அடிமை முறை தோன்றிய பொழுதுதான், மக்களின் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினர் உழவுத் தொழிலின் சற்றும் பண்படாத முறைகளில் முனைந்து ஈடுபட்டு, அதன் மூலம் தேவைக்கு மேல் ஓரளவு மிகைப் பொருளை உற்பத்தி செய்ய முடிந்த பொழுதுதான், இந்த மிகைப் பொருள் அடிமையின் மிகமிகப் பிச்சைக்கார வாழ்வுக்கு இன்றியமையாததாக இல்லாமல், அது ஆண்டையின் கைகளில் சேர்ந்து விட்ட பொழுதுதான், இவ்வாறாக ஆண்டைகள் என்ற இவ்வர்க்கத்தின் நிலை உறுதியான பொழுது—அது மேலும் உறுதியாக வேண்டி, அரசு தோன்ற வேண்டியது அவசியமாயிற்று.

அது தோன்றியே விட்டது—அதாவது, ஆண்டைகளின் அரசு, ஆண்டைகளுக்கு அதிகாரம் தந்து, அடிமைகள் எல்லோர் மீதும் ஆட்சி புரியும் திறனுடையவராக அவர்களை ஆக்கிய ஓர் இயந்திரம் தோன்றியே விட்டது. சமுதாயம், அரசு இரண்டுமே இன்று இருப்பவற்றினும் அன்று மிகமிகச் சிறியனவாக இருந்தன. இன்றைய நிலையுடன் ஒப்பிடவே முடியாத அளவு வலுக்குறைவான தொடர்பு நிலவுவதற்கான சாதனங்களையே அவைகள் கொண்டிருந்தன—தற்காலத்துப் போக்குவரவுச் சாதனங்கள் அன்று இருந்ததில்லை. மலைகளும், ஆறுகளும், கடல்களும் இன்று இருப்பதைவிட அளந்தறிய முடியாதவாறு மாபெரும் தடைகளாக இருந்தன. அரசு உருவாவது தற்காலத்துடன் ஒப்பிடும் போது மிகக் குறுகிய பூகோள எல்லைகளுக்கு உட்பட்டிருந்தது. நிர்வாக முறைகளில் வலுக்குறைந்த அரசாங்க இயந்திரம் ஒப்புநோக்கில் குறுகலான எல்லைகள், குறுகலான செயல் வட்டம் ஆகியவற்றுள் அடங்கிக் கிடந்த அரசுக்குப் பணியாற்றியது. ஆயினும் அடிமைகள் தொடர்ந்து அடிமைகளாயிருக்குமாறு கட்டாயப்படுத்திய, சமுதாயத்தின் ஒரு பகுதி மற்றொன்றுக்குக் கீழ்ப்பட்டு, அதனால் ஒடுக்கப்பட்டு இருக்குமாறு செய்த ஓர் இயந்திரம் இருக்கத்தான் செய்தது. வன்முறைக்குரிய நிலைத்த இயந்திரம் இல்லாமல் சமுதாயத்தின் பெரும்பாலான பகுதியை சமுதாயத்தின் மற்றப் பகுதிக்காக முறையாக உழைக்கும்படிக் கட்டாயப்படுத்துவது முடியாத காரியம். வர்க்கங்கள் இல்லாமலேயிருந்த வரையில், இந்த இயந்திரமும் இருந்ததேயில்லை. வர்க்கங்கள் தோன்றிய பொழுது, எங்கும் எப்பொழுதும் இந்தப் பிரிவினை வளர்ச்சி பெற்று வலுவடைந்ததோடு கூட தனித்த ஓர் ஏற்பாடு —அதாவது அரசு—தோன்றிற்று. அரசின் வடிவங்கள் அளவிறந்து வேறுபட்டவை. அடிமை முறையின் காலப் பகுதியிலேயே இந்தக் காலத்துக்கேற்ப மிகமிக முன்னேற்றமும் பண்பாடும் நாகரிகமும் பெற்ற நாடுகளில்—எடுத்துக்காட்டாக, முற்றிலும் அடிமை முறையின் அடிப்படையில் நிலைபெற்றிருந்த பண்டைய கிரேக்க, ரோம தேசங்களில்—அரசின் பல்வேறு வடிவங்கள் இருந்ததை நாம் காண்கிறோம். அக்காலத்திலேயே முடியரசுக்கும் குடியரசுக்கும் இடையே, உயர்குடியாட்சிக்கும் ஜனநாயக ஆட்சிக்கும் இடையே வேற்றுமை

தோன்றிற்று. முடியரசென்பது தனி ஒரு மனிதனின் அதிகாரம். குடியரசென்பது தேர்தல் மூலம் பெறாத யாதொரு அதிகாரமும் இல்லாதிருப்பது. உயர்குடியாட்சி என்பது, மொத்த மக்கள் தொகையுடன் ஒப்பிடும் பொழுது, மிகச் சிறுபான்மையோரின் அதிகாரம். ஜனநாயக ஆட்சி என்பது மக்களின் அதிகாரம் (கிரேக்க மொழியில் ''டிமாக்ரஸி என்ற சொல்லின் பொருள் மக்களின் அதிகாரம் என்பது). இவ்வேற்றுமைகள் எல்லாம் அடிமை முறையின் கால கட்டத்தில் எழுந்தன. இவ்வேற்றுமைகள் இருந்துங்கூட, அடிமை முறைக் கால கட்டத்தின் அரசு—அது முடியரசாகவோ, அல்லது உயர்குடி மக்களின் குடியரசாகவோ, அல்லது ஜனநாயகக் குடியரசாகவோ எவ்வாறிருந்தாலும் — அடிமை முறை அரசாகவே இருந்தது.

பண்டைக் கால வரலாறு பற்றிய ஒவ்வொரு வகுப்பிலும் இப்பொருள் பற்றிய விரிவுரையைக் கேட்குங்கால், முடியரசுகளுக்கும் குடியரசுகளுக்குமிடையே நிகழ்ந்த போராட்டத்தைப் பற்றி நீங்கள் கேட்பீர்கள். ஆயினும் அடிமைகள் மனிதப் பிறவிகளாக மதிக்கப்படவில்லை என்பது அடிப்படை உண்மையாகும். அடிமைகள் குடிமக்களாக மதிக்கப்படாதது மட்டுமன்று, அவர்கள் மனிதப் பிறவிகளாகக்கூட மதிக்கப்படவில்லை. ரோமச் சட்டம் அவர்களை வெறும் தட்டுமுட்டுப் பொருளாகவே மதித்தது. மனித வதை பற்றிய சட்டமே அடிமைகளுக்குச் செலுத்தப் பெறவில்லை என்றால், தனிநபர் பாதுகாப்புக்காகவுள்ள மற்றச் சட்டங்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? அது ஆண்டைகளுக்கு மட்டுந்தான் பாதுகாப்பளித்தது—அவர்கள் மட்டுமே முழுவுரிமை கொண்ட குடிமக்களாகக் கருதப்பட்டனர். முடியரசோ, அல்லது குடியரசோ எது ஏற்படுத்தப்படினும், அது ஆண்டைகளின் முடியரசாகவோ, அல்லது ஆண்டைகளின் குடியரசாகவோ தான் திகழ்ந்தது. அவற்றின் கீழ் ஆண்டைகளே எல்லா உரிமைகளையும் அனுபவித்தனர். அடிமையோ, சட்டப் பிரகாரம் ஒரு பொருளாகவே இருந்தான். அடிமைக்கு எவ்வகைப்பட்ட கொடூரத்தையும் இழைக்க முடியும் என்பது மட்டுமல்ல, அடிமையைக் கொல்வதுகூடக் குற்றமாகக் கருதப்படவில்லை. அடிமை முறைக் குடியரசுகள் தம்முடைய உள் அமைப்பில் வேறுபட்டிருந்தன. சில உயர்குடி மக்களின் குடியரசுகளாக

வும், வேறுசில ஜனநாயகக் குடியரசுகளாகவும் இருந்தன. உயர்குடி மக்களின் குடியரசில் சலுகை பெற்ற மிகச் சிலரே தேர்தலில் பங்கு கொண்டனர். ஜனநாயகக் குடியரசிலோ ஒவ்வொருவரும் தேர்தலில் பங்கு கொண்டனர்—ஆனுல், அங்கும் ஆண்டைகள் மட்டுந்தான், அதாவது அடிமைகளைத் தவிர எல்லோரும் தேர்தலில் பங்கு கொண்டார்கள். இந்த அடிப்படை உண்மையைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில், மற்ற எந்த உண்மையையும்விட, அரசு பற்றிய பிரச்சினையை அது மேலும் விளக்கிக் காட்டுவதோடு, அரசின் இயல்பையும் தெளிவாகக் காட்டுகிறது.

அரசென்பது ஒரு வர்க்கம் மற்ருெரு வர்க்கத்தால் ஒடுக்கப் பெறுவதற்கான ஓர் இயந்திரம். ஒரு வர்க்கத்திற்கு மற்ற அடிப்பட்ட வர்க்கங்களைக் கீழ்ப்படிந்து இருக்கச் செய்யும் ஓர் இயந்திரம். இந்த இயந்திரத்திற்கு வேறு வேருன வடிவங்கள் உண்டு. அடிமை முறை அரசில், முடியரசும், உயர்குடி மக்களின் குடியரசும், ஜனநாயகக் குடியரசுங் கூட இருந்ததைக் கண்டோம். உண்மையில், ஆட்சி முறையின் வடிவங்கள் மிகமிக வேறுபட்டன, ஆயினும் அவற்றின் சாரம் எப்பொழுதும் ஒன்றேதான்: அடிமைகளுக்கு எந்த உரிமையும் இல்லை; அவர்கள் ஒடுக்கப்பட்ட வர்க்கமாகவே அமைந்தனர்; அவர்கள் மனிதப் பிறவிகளாக மதிக்கப்படவில்லை. பண்ணையடிமை முறை அரசிலும் இதே நிலையைத்தான் நாம் காண்கிறோம்.

சுரண்டும் முறையில் ஏற்பட்ட மாறுதல், அடிமை முறை அரசைப் பண்ணையடிமை முறை அரசாக மாற்றியமைத்தது. இது அளவற்ற முக்கியத்துவம் கொண்டதாகும். அடிமை முறைச் சமுதாயத்தில், அடிமைக்கு எவ்வகைப்பட்ட உரிமையும் இல்லை, அவர் ஒரு மனிதப் பிறவியாகக் கருதப்படுவதில்லை; பண்ணையடிமை முறை சமுதாயத்திலோ, குடியானவன் நிலத்தோடு பிணைக்கப்பட்டான். பண்ணையடிமை முறையின் தலையான அடையாளமே, குடியானவர்கள் (அப்போது குடியானவர்களே பெரும்பான்மையராக அமைந்திருந்தனர்; நகர்வாசிகள் மிகக் குறைந்த தொகையே இருந்தனர்) நிலத்தோடு பிணைக்கப்பட்டவராகக் கருதப்பட்டனர் என்பதே. இதிலிருந்துதான் பண்ணையடிமை என்ற கருத்தோட்டம் உருவாகியது. தனக்கு நிலப்பிரபுவினுல் ஒதுக்கித்

தரப்பட்ட துண்டு நிலத்தில் குறிப்பிட்ட நாட்கள்வரை குடியானவன் தனக்காக உழைக்கலாம். மற்றை நாட்களில் அந்தப் பண்ணையடிமை தன் நிலப்பிரபுவுக்காக உழைத்தான். வர்க்கச் சமுதாயத்தின் சாரம் அப்படியேயிருந்தது—வர்க்கச் சுரண்டல் முறையை ஆதாரமாகக் கொண்டே சமுதாயம் அமைந்திருந்தது. நிலப்பிரபுக்கள் மட்டுந்தான் முழு உரிமைகளையும் அனுபவிக்க முடிந்தது. குடியானவர்களுக்கு உரிமைகளே இல்லை. நடைமுறையில் அவர்களது நிலை அடிமை முறை அரசிலிருந்த அடிமைகளின் நிலையினின்றும் மிகச் சிறிதளவே வேறுபட்டது. இருந்த போதிலும், அவர்களுடைய, குடியானவர்களுடைய விடுதலைக்குரிய விரிந்த வாய்ப்பும் கிடைத்தது. ஏனெனில் பண்ணையடிமை நிலப்பிரபுவின் நேரடி உடைமையாகக் கருதப்படவில்லை. அவன் தனக்கேயுரிய நிலத்தில் தனது நேரத்தின் ஒரு பகுதியைக் கழிக்க, ஒரு வகையில் ஒரு குறித்த அளவுக்குத் தனக்கே உரியவனாக இருக்க முடிந்தது. பண்ட மாற்றமும் வாணிப உறவுகளும் வளர்ச்சி பெறுவதற்கான மிகப் பரந்த வாய்ப்புகள் ஏற்பட்டதும், பண்ணையடிமை முறை மேலும் மேலும் சிதைந்து குலைவதாயிற்று, குடியானவர்களின் விடுதலை வாய்ப்பு மேலும் மேலும் விரிவடைந்தது. பண்ணையடிமை முறை சமுதாயம், அடிமை முறை சமுதாயத்தைக் காட்டிலும் எக்காலும் அதிகச் சிக்கலானது. அதன்கண், வாணிபம், தொழில் ஆகியவை பெருமளவு வளர்ச்சியடைந்தன. அது அந்நாளிலேயே முதலாளித்துவத்திற்கு இட்டுச் சென்றது. மத்திய காலத்தில் பண்ணையடிமை முறை ஆதிக்கம் வகித்தது. இங்குங்கூட, அரசின் வடிவங்கள் வேறுபட்டன. இங்குங்கூட, முடியரசு, குடியரசு என்ற இரண்டையும் காண்கிறோம். இவற்றில் பிந்தியது வலுக்குறைவாக வெளிப்பட்டது. ஆயினும், நிலப்பிரபுக்கள் மட்டுமே ஆள்வோராக எப்பொழுதும் கருதப்பட்டனர். பண்ணையடிமைகளான குடியானவர்கள் அரசியல் உரிமைகள் எல்லாவற்றிலிருந்தும் முற்ற முழுக்க விலக்கி வைக்கப்பட்டனர்.

அடிமை முறை, பண்ணையடிமை முறை ஆகிய இரு அமைப்புகளிலுமே மக்களின் மிகச் சிறுபான்மையினர் மிகப் பெரும்பான்மையினர் மீது வன்முறை இல்லாது ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. ஒடுக்கப் பெற்ற வர்க்கங்கள் ஒடுக்கு

முறையை அகற்றி எறிவதற்காக இடைவிடாது செய்த முயற்சிகளைப் பற்றி வரலாற்றில் நிரம்பக் காணலாம். அடிமை முறையிலிருந்து விடுதலை பெறுவதற்காகப் பல பத்தாண்டுகள் வரை தொடர்ந்து நடந்த போர்களின் விவரங்கள் அடிமை முறை அமைப்பின் வரலாற்றில் உள்ளன. ஜெர்மன் கம்யூனிஸ்டுகள், ''ஸ்பார்த்தகிஸ்டுகள்'' என்ற பெயரை ஏற்றுக் கொண்டிருப்பதை இங்கே குறிப்பிடலாம்—முதலாளித்துவ நுகத்தடியைத் தூக்கியெறிய உண்மையிலேயே போராடும் ஒரே ஜெர்மன் கட்சி இது. அவர்கள் இப்பெயரை மேற்கொண்ட காரணம், ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த அடிமைகளின் மிகப் பெரிய எழுச்சி ஒன்றின் மிகமிகப் பிரபலமான தலைவனாகத் திகழ்ந்தவனின் பெயர் ஸ்பார்த்தகஸ் என்பதனாலே ஆகும். பார்வைக்கு எல்லா வல்லமையும் கொண்டது போல் தோன்றிய ரோமப் பேரரசு, முழுக்கவும் அடிமை முறையின் அடிப்படையில் அமைந்திருந்த ரோமப் பேரரசு, ஸ்பார்த்தகஸ் தலைமையின் கீழ் ஆயுதமேந்தி, ஒரு மாபெரும் படையாக ஒன்று திரண்ட அடிமைகளின் மாபெரும் எழுச்சியின் தாக்குதலுக்குள்ளாகிப் பல்லாண்டுகள் வரையில் அதிர்ச்சிகளுக்கும் அடிகளுக்கும் உள்ளாயிற்று. இறுதியில், அவ்வடிமைகள் தோற்றுச் சிறைப் பிடிக்கப்பட்டு, ஆண்டைகளால் சித்திரவதை செய்யப்பட்டனர். வர்க்கச் சமுதாயம் பற்றிய வரலாறு முழுவதிலும் இத்தகைய உள்நாட்டுப் போர்களைக் காணலாம். அடிமை முறையின் கால கட்டத்தில் நிகழ்ந்த இவ்வகையான உள்நாட்டுப் போர்களில் மிக மிகப் பெரிதான ஒன்றையே, நான் இப்போது ஓர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டேன். இவ்வாறே பண்ணையடிமை முறையின் கால கட்டம் முழுவதும் குடியானவர்களின் இடைவிடாத எழுச்சிகள் நிறைந்ததாகும். எடுத்துக்காட்டாக, மத்திய காலத்தில் ஜெர்மனியில் நிலப் பிரபுக்கள் பண்ணையடிமைகள் என்ற இரண்டு வர்க்கங்களுக்கிடையே தோன்றிய போராட்டம் பெருத்த அளவில் விரிவடைந்து, நிலப்பிரபுக்களை எதிர்த்துக் குடியானவர்கள் நிகழ்த்திய உள்நாட்டுப் போராக மாறி விட்டது. இது போலவே, ருஷ்யாவிலும் நிலப்பிரபுக்களை எதிர்த்துக் குடியானவர்கள் மீண்டும் மீண்டும் நடத்திய எழுச்சிகளைப் பற்றி நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்.

—தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்தவும், தங்கள் அதிகாரத்தைப் பாதுகாக்கவும் நிலப்பிரபுக்களுக்கு ஓர் இயந்திரம் தேவையாயிருந்தது. இதைக் கொண்டு, பரந்த எண்ணிக்கையிலான மக்களை ஒன்றுதிரட்டித் தங்களுக்கு ஆட்படுத்தவும் குறிப்பிட்ட சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அவர்களைக் கீழ்ப்படுத்தவும் முடிந்தது. இச்சட்டங்கள் அனைத்தின் அடிப்படைக் கருத்து ஒன்றே—பண்ணையடிமைகள் மீது நிலப்பிரபுக்களின் ஆதிக்கம் நிலைத்திருக்க வேண்டும் என்பதே அது. இதுதான் பண்ணையடிமை முறை அரசு. இதற்கு எடுத்துக்காட்டாக, ருஷ்யாவையோ அல்லது இன்றும் பண்ணையடிமை முறை நிலவுகிற, முற்றும் பின்தங்கிய ஆசிய நாடுகளையோ குறிப்பிடலாம். நிலப்பிரபுத்துவ அரசு வடிவத்தில் ஆங்காங்கு வேறுபட்டிருந்தது—குடியரசாகவோ முடியரசாகவோ அது விளங்கியது. அரசு என்பது முடியரசாக இருந்த பொழுது, ஒற்றை நபரின் ஆட்சி ஏற்கப்பட்டது. அது குடியரசாக இருந்த பொழுது, நிலப்பிரபுத்துவச் சமூகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சியில் பங்கு பெறுவது ஏதேனும் ஓர் அளவிலே ஏற்கப்பட்டது. இது நிகழ்ந்தது பண்ணையடிமை முறைச் சமுதாயத்தில். பண்ணையடிமை முறைச் சமுதாயத்தில் நிலவிய வர்க்கப் பிரிவினையின்படி, மிகப் பெரும்பாலோர், அதாவது பண்ணையடிமைகள், மிகமிகச் சிறுபான்மையோரை, அதாவது நிலங்களின் சொந்தக்காரர்களான பிரபுக்களை, முற்றிலும் சார்ந்திருந்தனர்.—

—வாணிபத்தின் வளர்ச்சி, பண்ட மாற்றத்தின் வளர்ச்சி இவற்றின் விளைவாக முதலாளிகள் என்ற ஒரு புதிய வர்க்கம் உருவாயிற்று. மத்திய காலத்தின் இறுதியில், அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, உலக வாணிகம் ஏராளமாக வளர்ச்சியுற்ற பொழுது, விலையுயர்ந்த உலோகங்களின் அளவு பெருக்கமான பொழுது, வெள்ளியும் பொன்னும் பரிமாற்றத்தின் சாதனங்களாக ஆன பொழுது, தனிப்பட்டவர்கள் பெருந்திரளான செல்வம் பெறுவதைப் பணப் புழக்கம் சாத்தியமாக்கிவிட்ட பொழுது, மூலதனம் என்பது தோன்றிற்று. உலகு எங்கணும் வெள்ளியும் பொன்னும் செல்வமாக ஏற்கப்பட்டன. நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் பொருளாதார வல்லமை சரிந்தது. புதிய வர்க்கத்தின்—முதலாளித்துவப்

பிரதிநிதிகளின்—வல்லமை வளர்ச்சி பெற்றது. சமுதாய அமைப்பில் உண்டான மாற்றத்தின்படி எல்லாக் குடிமக்களும் சமம் என்று பெயரளவில் ஏற்பட்டது. ஆண்டைகளும் அடிமைகளுமாக இருந்த பழம் பிரிவினை மறைந்தது. ஒவ்வொருவரிடமும் உள்ள மூலதனம் எதுவாக இருப்பினும், சட்டத்தின்படி எல்லோரும் சரிநிகராக மதிக்கப்பட்டனர். அதாவது, நிலத்தைத் தமது தனியுடைமையாகக் கொண்டிருப்பவரும் சரி, அல்லது தமது உழைப்புச் சக்தியைத் தவிர வேறு எந்தச் சொத்தும் இல்லாத பஞ்சையும் சரி, சட்டத்தின்படி சரிநிகரானவர் எனக் கருதப்பட்டனர். சட்டம் ஒவ்வொருவரையும் சமமாகப் பாதுகாக்கிறதாம். அது சொத்துடைமையோரின் சொத்துக்களைச் சொத்தில்லாத மக்கள் திரள் தாக்குவதினின்றும் காத்தளிக்கிறது—சொத்தில்லாத அந்த மக்களோ, தமது உழைப்புச் சக்தியைத் தவிர வேறு உடைமை எதுவும் இல்லாதவராய், நாளுக்கு நாள் மென்மேலும் வறுமைப்பட்டு நிலைகுலைந்து பாட்டாளிகளாக மாற்றப் பெறுகின்றனர். இதுதான் முதலாளித்துவச் சமுதாயம்.

இது பற்றி மிக விரிவாக என்னால் பேச முடியாது. நீங்கள் கட்சியின் வேலைத்திட்டத்தைப் பற்றிப் பேசும்பொழுது, இப்பிரச்சினைக்கு மீண்டும் திரும்புவீர்கள். அப்பொழுது முதலாளித்துவச் சமுதாயத்தின் தன்மை பற்றிய விளக்கவுரையை நீங்கள் கேட்பீர்கள். இந்தச் சமுதாயம் விடுதலை என்ற கோஷத்தை எழுப்பி, நிலப்பிரபுத்துவ முறையை எதிர்த்து, பழைய பண்ணையடிமை முறையை எதிர்த்து, முன்வந்தது. ஆனால், அது சொத்துடையவர்களுக்கு மட்டுமே விடுதலையாயிற்று. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பண்ணையடிமை முறை சிதறடிக்கப்பட்டது—ருஷ்யாவில் மற்ற நாடுகளைவிட மிகவும் பிந்திய காலத்தில், 1861ல் இது நிகழ்ந்தது—நிலப்பிரபுத்துவ அரசின் இடத்தில் முதலாளித்துவ அரசு நிலை பெற்றது. முதலாளித்துவ அரசு, எல்லா மக்களுக்கும் விடுதலை என்பதைத் தன்னுடைய கோஷமாகப் பறைசாற்றுகிறது; அது எல்லா மக்களுடைய சித்தத்தையும் வெளியிடுவதாகக் கூறிக் கொள்கிறது; தான் ஒரு வர்க்கச் சார்பான அரசென்பதை மறுக்கிறது. இந்நிலையில் மக்கள் எல்லோருடைய விடு

தலைக்காகப் போராடும் சோஷலிஸ்டுகளுக்கும், முதலாளித்துவ அரசுக்கும் இடையே ஒரு போராட்டம் வளர்வதாயிற்று. இப்போராட்டத்தின் விளைவாகவே சோவியத் சோஷலிசக் குடியரசு தோன்றியிருக்கிறது. அத்துடன் இப் போராட்டம் உலகம் முழுவதிலும் பரவியிருக்கிறது.

உலக முதலாளித்துவத்திற்கு எதிராகத் தொடங்கப்பட்டுள்ள போராட்டத்தைப் புரிந்து கொள்ள, முதலாளித்துவ அரசின் சாரத்தைப் புரிந்து கொள்ள, முதலாளித்துவ அரசு நிலப்பிரபுத்துவ அரசை எதிர்த்து முன்வந்த பொழுது, விடுதலை என்ற கோஷத்துடன்தான் போரில் இறங்கிற்று என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பண்ணையடிமை முறை ஒழிக்கப்பட்டது என்றால், முதலாளித்துவ அரசின் பிரதிநிதிகளுக்கு விடுதலை கிட்டி விட்டது என்று பொருளாயிற்று. பண்ணையடிமை முறை தகர்ந்ததனால், குடியானவர்கள் நிலத்தை விலை கொடுத்து மீட்டோ அல்லது பகுதி பகுதியாக விடுவரி செலுத்தியோ (அரசிற்கு இதில் கவலை கிடையாது), அதனைத் தமது முழு உடைமையாகக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்று விட்டதால், முதலாளித்துவ அரசின் பிரதிநிதிகளுக்கு அது மேலும் உதவியாயிற்று. உடைமை எவ்விதமாக வந்ததாயினும் அரசு அதைப் பாதுகாத்தது; ஏனெனில், அரசு என்பது தனியுடைமையையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. நவீன நாகரிக நாடுகள் அனைத்திலும் குடியானவர்கள் தனியுடைமை கொண்டவராக ஆகி விட்டனர். தனது நிலத்தின் ஒரு பகுதியைக் குடியானவனுக்குக் கொடுத்துவிட்ட பொழுதுங்கூட, மீட்புத் தொகையின் மூலமும், நிலத்தை விற்பனை செய்து பணம் பெறுவதன் மூலமும் நிலப்பிரபுவுக்குக் கைம்மாறு செய்து, அரசு தனியுடைமையைக் காத்தளித்தது. ஒரு வகையில், தனியுடைமையை முழுக்கப் பாதுகாப்பதாக அரசு பறைசாற்றிற்று எனலாம்; தனியுடைமைக்கு எல்லா வித உதவியையும் பாதுகாப்பையும் அது வழங்கலாயிற்று. வணிகன், தொழில் முதலாளி, ஆலைச் சொந்தக்காரன் ஆகிய ஒவ்வொருவரின் சொத்து உரிமைகளையும் அரசு அங்கீகரித்தது. தனியுடைமை, மூலதனத்தின் ஆதிக்கம், சொத்தில்லாத தொழிலாளரையும் உழைத்து வாழும் குடியானவர்களையும் முழுக்கவும் அடிபணிய வைப்பது என்ற அடித்தளத்தில் நின்றுள்ள இந்தச் சமுதாயம், தன்

னுடைய ஆட்சி சுதந்திரத்தையே ஆதாரமாகக் கொண்டிருப்ப தாகப் பறைசாற்றியது. பண்ணையடிமை முறையை எதிர்த்துப் போரிட்டு, உடைமையின் சுதந்திரத்தைப் பறைசாற்றிற்று. அரசு என்பது ஒரு வர்க்க அரசாக இருந்த நிலை போய் விட்டதாகக் கூறிக் குறிப்பாகப் பெருமைப்பட்டது.

இருப்பினும், ஏழைக் குடியானவர்களையும் தொழிலாளி வர்க்கத்தையும் அடிபணிய வைப்பதில் முதலாளிகளுக்கு உத வும் ஓர் இயந்திரமாக அரசு தொடர்ந்து இருந்து வந்தது. ஆனால் வெளித்தோற்றத்தில் அது சுதந்திரமானதாக இருந் தது. அனைத்து மக்களுக்குரிய வாக்குரிமையைப் பிரகடனப் படுத்தி, தனது ஆதரவாளர்கள், பிரசாரகர்கள், அறிஞர் கள், தத்துவஞானிகள் ஆகியோர் மூலமாக, இது ஒரு வர்க்க அரசல்ல என்பதை அறிவித்தது. இப்பொழுதும், சோவியத் சோஷலிசக் குடியரசுகள் அதனோடு போர் தொடங்கி யிருக்கும் பொழுது, நாம் சுதந்திரத்திற்கு உலை வைப்பதாக வும், ஒரு பகுதியை மற்றவர்களைக் கொண்டு அடக்கி ஒடுக்கி விட்டு, வலுக்கட்டாய அடிப்படையில் ஓர் அரசை அமைப் பதாகவும் அவர்கள் நம்மீது குற்றஞ்சாட்டுகிறார்கள். அவர் களோ, எல்லா மக்களையும் தழுவிய ஜனநாயக அரசின் பிரதி நிதிகளாக இருக்கிறார்களாம். இப்பொழுது, அதாவது, உலக சோஷலிசப் புரட்சி தொடங்கியிருக்கிற இந்நேரத்தில், சில நாடுகளில் புரட்சி வெற்றி பெற்றிருக்கிற இத்தறுவாயில், உலக முதலாளித்துவத்தை எதிர்த்து நடத்தும் போராட்டம் குறிப்பாகக் கடுமை பெற்றுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், அரசு பற்றிய பிரச்சினை மாபெரும் முக்கியத்துவம் பெற் றிருக்கிறது. இன்று இது மிகவும் அவசரமான பிரச்சினை யாக, எல்லா அரசியல் பிரச்சினைகள், எல்லா அரசியல் தகராறுகள் ஆகியவற்றின் குவி மையமாக ஆகியிருக்கிறது என்றும் கூறலாம்.

ருஷ்யாவிலோ அல்லது அதைவிட மிக்க நாகரிகம் படைத்த நாடு யாதானும் ஒன்றிலோ உள்ள எந்த ஒரு கட்சி யை நாம் எடுத்துக் கொண்டாலும், கிட்டத்தட்ட எல்லா அர சியல் தகராறுகளும் வேறுபாடுகளும் கருத்தோட்டங்களும் இன்று அரசைப் பற்றிய கருத்தைச் சுற்றியே மையங் கொண் டுள்ளன என்று காண்கிறோம். ஒரு முதலாளித்துவ நாட்டில், ஒரு ஜனநாயகக் குடியரசில்—குறிப்பாக, சுவிட்ஸர்லாந்து

அல்லது அமெரிக்கா போன்ற ஒரு குடியரசில்—மிகமிகச் சுதந்திரமான ஜனநாயகக் குடியரசுகளில், அரசு என்பது மக்களனைத்தினுடைய சித்தத்தின் வெளியீடாக, மக்களுடைய பொதுவான தீர்மானத்தின் ஒன்றுதிரண்ட முடிவாக, தேசிய சித்தத்தின் வெளியீடாக, இவை போன்ற பிறவாக, இருக்கின்றதா? அல்லது, அரசு என்பது அங்குள்ள தொழிலாளி வர்க்கத்தின், விவசாயி மக்களின் மீது முதலாளிகள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்த வல்லமையளிக்கும் ஓர் இயந்திரமாக இருக்கின்றதா? இது ஓர் அடிப்படையான பிரச்சினை; இதைச் சுற்றித்தான் உலகம் எங்கும் அரசியல் விவாதங்கள் இன்று மையங்கொண்டுள்ளன. போல்ஷிவிசம் பற்றிச் சொல்லப்படுகிறது யாது? முதலாளித்துவப் பத்திரிகைகள் போல்ஷிவிக்குகளைத் திட்டுகின்றன. போல்ஷிவிக்குகள் மக்கள் ஆட்சிக்கு உலை வைக்கிறார்கள் என்ற உளுத்துப்போன குற்றச்சாட்டைத் திருப்பித்திருப்பிச் சொல்லாத எந்த ஒரு செய்தித்தாளையுங்கூட நீங்கள் காண முடியாது. சுதந்திரத்தையும் மக்களின் ஆட்சியையும் போல்ஷிவிக்குகள் குலைத்து விட்டார்கள் என்ற குற்றச்சாட்டைத் தாங்களே முதன் முதலில் கண்டறிந்து புழங்க விட்டதாக நமது மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் தங்கள் அப்பாவித்தனத்தினால் நினைப்பார்களானால் (ஒருகால் அது அப்பாவித்தனமாக இல்லாமலுமிருக்கலாம்; ஆனால் பழமொழியில் சொல்வது போல இந்த அப்பாவித்தனம் வழிப்பறியைவிட மிகக் கேடானது) அவர்கள் எள்ளி நகையாடும் அளவுக்குத் தவறான கருத்துடையவர் ஆவார்கள். இன்று மிகப் பெரும் செல்வம் படைத்த நாடுகளில் உள்ள மிகமிகச் செல்வச் செழிப்பான பத்திரிகைகள், கோடிக் கணக்கான பிரதிகளை வழங்கி, முதலாளித்துவ வர்க்கத்தினரின் பொய்களையும் ஏகாதிபத்தியக் கொள்கையையும் பரப்புவதற்காகக் கோடிக் கணக்கில் பணத்தைச் செலவிடுகின்றன. இத்தகைய தாள்களில், போல்ஷிவிசத்திற்கு எதிராக இவ்வடிப்படை வாக்கு வாதங்களையும் குற்றச்சாட்டுகளையும் திருப்பித் திருப்பிச் சொல்லாத ஒன்றுகூட இல்லை. அமெரிக்கா, இங்கிலாந்து, சுவிட்ஸர்லாந்து ஆகியவை அனைத்து மக்களினுடைய ஆட்சியை ஆதாரமாகக் கொண்ட முன்னேற்றமான அரசுகள் என்றும், போல்ஷிவிக் குடியரசோ, கொள்ளைக்காரர்களின் அரசு என்றும்,

அதில் சுதந்திரம் என்பது அறியப்படாத ஒன்று என்றும், போல் ஷிவிக்குகள் அனைத்து மக்களினுடைய ஆட்சி என்ற கருத்துக்கே உலைவைத்து, அரசியல் நிர்ணய சபையையுங்கூடக்* கலைத்து விடும் அளவுக்குப் போய் விட்டார்கள் என்றும் அவை கூறுகின்றன. போல்ஷிவிக்குகளுக்கு எதிரான இந்தக் கொடிய குற்றச்சாட்டுகள் உலகம் எங்கும் திருப்பித் திருப்பிக் கூறப்படுகின்றன. இந்தக் குற்றச்சாட்டுகள், ஒரு கேள்விக்கு எதிரே நம்மை முழுக்கவும் கொண்டுவந்து நிறுத்துகின்றன —அரசு எனப்படுவது யாது? இக்குற்றச்சாட்டுகளைப் புரிந்து, தெரிந்து கொண்டு, அவற்றின் பால் அறிவுபூர்வமான ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமானால், காதால் கேட்டதைக் கொண்டல்லாமல், நமக்கே உரிய உறுதியான கருத்தைக் கொண்டு அதை ஆராய வேண்டுமானால், அரசு

---

* அரசியல் நிர்ணய சபை கூட்டுவது பற்றித் தற்காலிக அரசாங்கம் 1917 மார்ச் 2 (15)ந் தேதியிட்ட தனது பிரகடனத்தில் அறிவித்தது. அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்களை 1917 செப்டெம்பர் 17 (30)ல் நடத்துவது என்ற தீர்மானம் தற்காலிக அரசாங்கத்தால் ஜூன் 14 (27)ல் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் ஆகஸ்டில் தேர்தல் நாள் 1917 நவம்பர் 12 (25) ஆக மாற்றப்பட்டது.

அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பின்பு, அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்கள், புரட்சிக்குப் பிறகு நாட்டில் உருவாகியிருந்த அரசியல் சக்திகளின் புதிய ஒப்புவலிமையைப் பிரதிபலிக்காததாய் நடைபெற்றன. எனவே வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் அரசியல் நிர்ணய சபையில் பெரும்பான்மை இடங்கள் பெற்றார்கள்.

அரசியல் நிர்ணய சபை 1918 ஜனவரி 5ல் கூடியது. 'உழைப்பாளிகள், சுரண்டப்பட்ட மக்கள் ஆகியோரின் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை' சோவியத் அரசாங்கம் அதன் முன் வைத்தது. புரட்சிக்கு எதிரான பெரும்பான்மையினர் இந்தப் பிரகடனத்தை அங்கீகரிக்க மறுத்து விட்டனர். சோவியத் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட சமாதானம் பற்றிய அரசாணையையும் நிலம் பற்றிய அரசாணையையும் ஊர்ஜிதம் செய்ய அவ்வாறே அவர்கள் மறுத்து விட்டனர். எனவே அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் குழு, அரசியல் நிர்ணய சபையைக் கலைத்துவிட முடிவு செய்தது. ருஷ்யாவின் திரளான தொழிலாளர்கள், படைவீரர்கள், குடியானவர்கள் ஆகியோர் இந்த முடிவை ஆதரித்தனர்.—ப-ர்.

என்றால் என்ன என்பது பற்றி நாம் தெளிவான கருத்தைப் பெற வேண்டும். விதம் விதமான முதலாளித்துவ அரசுகளும் இவற்றிற்கு ஆதரவாக வாதிடும் பொருட்டு யுத்தத்திற்கு முன்பு உருவாக்கப் பெற்ற எல்லாப் போதனைகளும் நம் முன் இருக்கின்றன. எனவே, இந்தப் பிரச்சினைக்குச் சரிவரத் தீர்வு காண வேண்டி, இப்போதனைகளையும் கண்ணோட்டங்களையும் நாம் விமர்சனக் கண்ணோடு ஆராய வேண்டும்.

எங்கெல்ஸ் எழுதிய குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற நூலைப் படிப்பது உங்களுக்கு உதவியாயிருக்கும் என்று நான் முன்னமேயே அறிவுறுத்தியுள்ளேன். நிலத்திலும் உற்பத்திச் சாதனங்களிலும் தனிச்சொத்து நிலவும் ஒவ்வோர் அரசும், மூலதனம் ஆதிக்கம் செலுத்தும் ஒவ்வோர் அரசும், எவ்வளவுதான் ஜனநாயகத் தன்மை உடையதாக இருப்பினும், அது முதலாளித்துவ அரசேயாகும்; தொழிலாளி வர்க்கத்தையும், ஏழைக் குடியானவர்களையும் அடிபணிய வைப்பதற்காக முதலாளிகளால் பயன்படுத்தப்படும் இயந்திரமாகும் அது என்று அந்த நூல் கூறுகிறது. அனைத்து மக்களுக்குரிய வாக்குரிமை, அரசியல் நிர்ணய சபை, நாடாளுமன்றம் என்பனவெல்லாம் வெறும் வெளித்தோற்றமே, ஒரு விதமான கடன்பத்திரமே ஆகும். உண்மை நிலைமையை இது மாற்றுவதில்லை என்றும் அது கூறுகிறது.

அரசு செலுத்தும் ஆதிக்கத்தின் வடிவங்கள் வேறுபடக் கூடும். ஒரு வகை வடிவம் நிலவுகிற இடத்தில் ஒரு விதமாகவும், இன்னொரு வகை வடிவம் நிலவுமிடத்தில் வேறொரு விதமாகவும் மூலதனம் தன் அதிகாரத்தை வெளிப்படுத்தும். ஆனால், வாக்களிக்கும் தகுதிகள் உண்டோ இல்லையோ, அல்லது குடியரசு ஜனநாயகத் தன்மை உடையதோ இல்லையோ, எதுவானாலும் நடைமுறையில் மூலதனத்தின் கரங்களில்தான் அதிகாரம் இருக்கிறது. உண்மையில், குடியரசு எவ்வளவுக்கு ஜனநாயகத் தன்மை கொண்டதாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு முதலாளித்துவ ஆட்சி அதிக முரடாகவும் அதிக இரக்கமின்றியும் இருக்கிறது. உலகத்தில் மிகப் பெரிய அளவு ஜனநாயகத் தன்மையுடைய குடியரசுகளில் ஒன்று, அமெரிக்க ஐக்கிய நாடுகள். இருந்தும், அமெரிக்காவில் இருப்பது போல (1905க்குப் பிறகு, அங்கிருந்தவர்களுக்கு ஒருகால்

இது தெரியக் கூடும்), அவ்வளவு பண்பற்ற வகையில், அவ்வளவு பட்டவர்த் தனமாக ஊழல் மிகுந்த வகையில், சமுதாயம் முழுவதின் மீதும் மூலதனத்தின் அதிகாரமும், விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில கோடீசுவரர்களின் ஆதிக்கமும் இருப்பது வேறு எங்கும் கிடையாது. மூலதனத்திற்கு இருப்பிடம் கிடைத்தால் போதும், சமுதாயம் முழுவதன் மீதும் அது ஆதிக்கம் புரியும். எந்த ஜனநாயகக் குடியரசும், எவ்விதமான வாக்குரிமையும் விஷயத்தின் சாரத்தை மாற்ற முடியாது.

பண்ணையடிமை முறையுடன் ஒப்பிடும் பொழுது, ஜனநாயகக் குடியரசும் அனைத்து மக்களுக்குரிய வாக்குரிமையும் மாபெரும் முன்னேற்றமாகத் திகழ்ந்தன. பாட்டாளி வர்க்கம் இன்று பெற்றுள்ள ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் அடைவதற்கும், மூலதனத்தை எதிர்த்து முறையாகப் போராடுகின்ற, உறுதியும் கட்டுப்பாடும் பெற்ற அணிகளை வகுப்பதற்கும் அவை வாய்ப்பு அளித்துள்ளன. பண்ணையடிமை குடியானவர்களிடம் கிட்டத்தட்ட இது போன்றதுகூட எதுவும் இருந்ததில்லை என்றால், அடிமைகளைப் பற்றிக் கூறத் தேவையேயில்லை. அடிமைகள் கிளர்ந்து எழுந்தனர், கலகம் புரிந்தனர், உள்நாட்டுப் போர்களைத் தொடங்கினர் என்பதை நாம் அறிவோம். ஆயினும் வர்க்க உணர்வுள்ள பெரும்பாலாரையோ, போராட்டத்தை நடத்துவதற்கு வேண்டிய கட்சிகளையோ அவர்கள் ஒருபோதும் தோற்றுவிக்க முடியவில்லை. தாங்கள் எந்தக் குறிக்கோளுக்காகப் போராடுகிறோம் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள அவர்களுக்கு முடியவில்லை. வரலாற்றின் மிகப் பெரும் புரட்சிகரமான கால கட்டங்களில்கூட ஆளும் வர்க்கங்களின் கைப்பாவைகளாகவே அவர்கள் எப்போதும் இருந்தனர். சமுதாயத்தின் உலக வளர்ச்சி நிலையிலிருந்து பார்க்கும் பொழுது, முதலாளித்துவக் குடியரசு, நாடாளுமன்றம், அனைத்து மக்களுக்குரிய வாக்குரிமை ஆகிய அனைத்தும் மாபெரும் முன்னேற்றத்தைக் காட்டுகின்றன. மனித இனம் முதலாளித்துவத்தை நோக்கிச் சென்றது. முதலாளித்துவம் ஒன்றுதான், நகர்ப்புறப்பண்பாட்டின் மூலம், ஒடுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கம் தன்னைத் தானே உணரும்படியாகச் செய்யவும் உலகத் தொழிலாளி இயக்கத்தை உண்டாக்கவும் வாய்ப்பு அளித்தது;

உலகெங்கிலும் உள்ள கோடிக் கணக்கான தொழிலாளர்களைக் கட்சிகளாக, திரளான மக்களின் போராட்டத்தை உணர்வுபூர்வமாக நடத்திச் செல்லும் சோஷலிசக் கட்சிகளாக அமையும்படி செய்தது. நாடாளுமன்ற முறை இல்லையேல், தேர்தல் அமைப்பு இல்லையேல், தொழிலாளி வர்க்கத்தின் இவ்வளர்ச்சிப் பெருக்கம் ஆகமுடியாத காரியமாகவே இருந்திருக்கும். அதனால்தான், பெருந் திரளான மக்களின் பார்வையில், இவையெல்லாம் அத்தனை பெரும் முக்கியத்துவமுடையன ஆகியிருக்கின்றன. அதனால்தான், திடீர் மாறுதல் என்பது அத்தனை கடினமானதாகத் தோன்றுகிறது. அரசு சுதந்திரமானது என்றும், எல்லோருடைய நலங்களையும் பாதுகாப்பது அதற்கு ஏற்பட்ட கடமை என்றும் முதலாளித்துவப் பொய்யை, உணர்வு பூர்வமான நயவஞ்சகரும் விஞ்ஞானிகளும் பாதிரிமார்களும் மட்டுந்தான் எடுத்துப் பேசி ஆதரிக்கிறார்கள் என்பதன்று. பழைய தப்பெண்ணங்களில் உண்மையிலேயே ஒட்டிக் கொண்டு பழைய முதலாளித்துவச் சமுதாயத்திலிருந்து சோஷலிசத்திற்கு நிகழும் மாறுதலைப் புரிந்து கொள்ளாமலிருக்கும் பெருந் திரளான மக்களும் அவ்வாறே செய்கிறார்கள். முதலாளித்துவ வர்க்கத்தினரை நேரடியாகச் சார்ந்திருக்கிற மக்கள் மட்டுமல்ல, மூலதனத்தின் நுகத்தினால் அழுத்தி ஒடுக்கப்பட்டவர்களோ, அல்லது மூலதனத்தினிடம் கைக்கூலி பெறுபவர்களோ மட்டுமல்ல (மூலதனத்திற்கு ஊழியம் புரியும் விஞ்ஞானிகள், கலைஞர்கள், பாதிரிகள் முதலான எல்லா வகைப்பட்டவர்களும் ஏராளமாக இருக்கின்றனர்), வெறுமனே முதலாளித்துவச் சுதந்திரம் பற்றிய தப்பெண்ணங்களுக்கு ஆட்பட்டிருக்கின்ற மக்களுங்கூட, போல்ஷிவிசத்திற்கு எதிராக உலகம் எங்கும் ஆயுதமேந்துகின்றார்கள். ஏனெனில், சோவியத் குடியரசு நிறுவப்பெற்ற பொழுது இது இந்த முதலாளித்துவப் பொய்களை மறுத்து விட்டு, ''நீங்கள் கூறுகிறீர்கள் உங்கள் அரசு சுதந்திரமானது என்று; ஆனால் உண்மையில், தனியுடைமை என்பது நீடிக்கிற வரையில் உங்களுடைய அரசு, ஜனநாயகக் குடியரசாக இருந்தாலுங்கூட, தொழிலாளரை அடக்குவதற்காக முதலாளிகளால் பயன்படுத்தப்படும் இயந்திரமே தவிர, வேறு எதுவுமன்று; எவ்வளவுக்கு அரசு சுதந்திரமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு இது தெளிவாக வெளிப்படுகிறது''

என்று வெளிப்படையாக அறிவித்துள்ளது. இதற்கு எடுத்துக் காட்டுகள், ஐரோப்பாவில் சுவிட்ஸர்லாந்தும், அமெரிக்காக் கண்டத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஆகும். எவ்வளவு ஆடம்பரமாக அவற்றை பூசி மெழுகினுலும் சரி, உழைப்பாளர் ஜனநாயகம், குடிமக்கள் எல்லோருடைய சமத்துவம் என்றெல்லாம் பேசினுலும் சரி, அவ்வளவு வெட்கங்கெட்டதாகவும், இரக்கமின்றியும் மூலதனம் வேறெங்கும் ஆள்வதில்லை; அவை ஜனநாயகக் குடியரசுகளாக இருந்துங்கூட, இந்த நாடுகளில் போல மூலதனத்தின் ஆதிக்கம் அத்தனைத் தெளிவாக வேறெங்கும் வெளிப்படுவதில்லை. உண்மையாதெனில், சுவிட்ஸர்லாந்திலும் அமெரிக்காவிலும் மூலதனம் ஆதிக்கம் புரிகிறது. தமது நிலைமையில் மிகமிகச் சிறிய உண்மையான அபிவிருத்தியைப் பெறும் பொருட்டுத் தொழிலாளர் செய்யும் ஒவ்வொரு முயற்சியிலும் அவர்கள் உடனடியான உள்நாட்டுப் போரினுல் எதிர்க்கப்படுகிருர்கள். இந்த நாடுகளில் படைவீரர்கள் மிகக் குறைவு, நிரந்தர இராணுவமும் அளவில் சிறியது. சுவிட்ஸர்லாந்தில் குடிமக்கள் படைதான் உண்டு, ஒவ்வொரு சுவிஸ் நாட்டுக்காரரிடமும் ஒரு துப்பாக்கி உண்டு. அமெரிக்காவிலோ, மிக அண்மை காலம் வரையில், நிரந்தர இராணுவம் இருந்ததில்லை. அதனுல், ஒரு வேலை நிறுத்தம் தோன்றினுல், முதலாளித்துவ வர்க்கம் ஆயுதமேந்தி, படையினர்களைக் கூலிக்கு அமர்த்தி, வேலைநிறுத்தத்தை அடக்கி விடுகிறது. சுவிட்ஸர்லாந்திலும் அமெரிக்காவிலும் போல் தொழிலாளி வர்க்கத்தின் இயக்கத்தை அடக்கி ஒடுக்குவதில் அவ்வளவு இரக்கமற்ற கொடுமை வேறெங்கும் நிகழ்வதில்லை. இந்த நாடுகளில் போல, நாடாளுமன்றத்திலே மூலதனத்தின் செல்வாக்கு அவ்வளவு வலுவுடன் வேறெங்கும் தன்னை வெளிப்படுத்துவதில்லை. மூலதனத்தின் பலம்தான் எல்லாம்; பங்கு மார்க்கெட்டுத்தான் எல்லாம், நாடாளுமன்றமும் தேர்தல்களும் வெறும் கயிறுடுபாவையும், கைப்பாவையுமாகும்.... ஆயினும், கொஞ்சம் கொஞ்சமாகத் தொழிலாளரின் கண்கள் திறக்கின்றன. சோவியத் அரசாட்சி பற்றிய கருத்து, முக்கியமாக நாம் சற்றுமுன் அனுபவித்து வந்த இரத்தக் களரிக்குப் பிறகு, மேலும் மேலும் விரிவாகப் பரவுகிறது. முதலாளிகளுக்கு எதிராகத் தயவு தாட்சண்ணியம் அற்ற ஒரு போரைத் தொடுக்க வேண்டியது

தேவை என்பது தொழிலாளி வர்க்கத்திற்கு மேலும் மேலும் தெளிவாகி வருகிறது.

ஒரு குடியரசு, மிகமிக ஜனநாயகத் தன்மையுடைய குடியரசுகூட, எந்த வேஷம் போட்டாலும், இது முதலாளித்துவக் குடியரசாக இருக்குமானல், இதில் நிலம், ஆலைகள், தொழிற் சாலைகள் ஆகியவற்றின் மீது தனியுடைமை நிலவுமானல், சமுதாயம் முழுவதையும் தனிப்பட்ட மூலதனம் கூலியடிமை நிலையில் வைக்குமானல், அதாவது நமது கட்சியின் வேலைத் திட்டத்திலும், சோவியத் அரசியல் அமைப்புச் சட்டத்திலும் சாற்றியவற்றை அது நிறைவேற்றவில்லையானல், அப்பொழுது இந்த அரசு சிலர் மற்றவர்களை அடக்கி வைப்பதற்காக உள்ள இயந்திரமேயாகும். இனி, மூலதனத்தின் ஆதிக்கத்தைத் தூக்கியெறிய வேண்டிய ஒரு வர்க்கத்திடம் இந்த இயந்திரத்தை ஒப்படைப்போம். அரசு என்பது அனைத்து மக்களுக் கிடையிலான சமத்துவத்தை ஆதாரமாகக் கொண்டது எனும் பழைய தப்பெண்ணங்களை எல்லாம் நாம் மறுப்போம். ஏனெனில் அது வஞ்சனையாகும்: சுரண்டல் நீடிக்கிற வரையில், சமத்துவம் என்பது இருக்க முடியாது. நிலப்பிரபு தொழிலாளிக்குச் சமம் என்றோ; அல்லது பசித்த மனிதன் வயிறார உண்டு கொழுத்த மனிதனுக்குச் சமம் என்றோ கூற முடியாது. அரசு என்பதற்கு அனைத்து மக்களினுடைய ஆட்சி என்று பொருள் எனும் பழங்கதைகளை நம்பிக் கொண்டு, மூடத்தனமான பயபக்தியுடன் மக்கள் அதன்முன் வணங்கி நின்றார்களே, அந்த அரசு எனும் இயந்திரத்தைப் பாட்டாளி வர்க்கம் ஒதுக்கித் தள்ளி விட்டு, அது முதலாளித்துவப் பொய் என்று சாற்றுகின்றது. முதலாளிகளிடத்திலிருந்து இந்த இயந்திரத்தைப் பறித்து, அதை நாம் எடுத்துக் கொண்டு விட்டோம். இந்த இயந்திரம் அல்லது குண்டாந்தடியைக் கொண்டு எல்லாச் சுரண்டலையும் நாம் தகர்த்தெறிவோம். சுரண்டலுக்கு வேண்டிய வாய்ப்பு உலகில் எவ்விடத்திலும் இல்லாமல் போன பொழுது, நிலச் சொந்தக்காரர்களும் ஆலைச் சொந்தக்காரர்களும் எங்குமே இல்லை எனும் பொழுது, சிலர் மட்டும் வாரி வாரி விழுங்க மற்றவர் பட்டினி கிடக்கும் நிலை நீடித்திராத பொழுது, இதற்கெல்லாம் இனி வாய்ப்பே கிடையாது எனும் நாளில்தான், இந்த இயந்திரத்தை நாம் குப்பையில் வீசுவோம். அப்பொழுது அரசென்பதும் இருக்காது,

சுரண்டலும் இருக்காது. நம் கம்யூனிஸ்டுக் கட்சியின் நோக்கு இதுவே. பின்னுல் நிகழும் விரிவுரைகளில் இந்தப் பொருளை நாம் மீண்டும் ஆராய்வோம்; அதனை ஆராய மீண்டும் மீண்டும் அதன்பால் திரும்புவோம் என்றே நம்பு கிறேன்.

*1929 ஜனவரி 18ல்,*
*பிராவ்தா பத்திரிகையின் இதழ் 15ல்,*
*முதன்முதலாக வெளியிடப்பட்டது*

## வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து “Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR” என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

**விற்பனையாளர்கள்**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**தலைமை அலுவலகம்**

*41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை— 600098.*

**ஷோ-ரூம்**

*136, மவுண்ட் ரோடு, சென்னை—600002.*

**கிளைகள்**

*80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.*
*87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.*
*சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.*
*செர்ரி ரோடு, சேலம்—636001.*

**விற்பனை நிலையங்கள்**

*3-22-75-D, மதுரை சாலை;*
*திருநெல்வேலி ஜங்ஷன்.*
*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.*